மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.
O.S.40/2024

வாக்குமூலம்: வா.சா.2 – தாமோதரன்
29.10.2025:

**சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு, 1ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை** : நான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. நான் வாதி அழைத்ததன் பேரில் தான் சாட்சியம் சொல்ல வந்தேன் என்றால் இல்லை வழக்கறிஞர் செல்லி வந்தேன். எனது பூர்வீகம் சின்ன கலையம்புத்தூர் என்றால் சரிதான். வாதிக்கும் சின்ன கலையம்புத்தூரில் தான் பூர்வீகம் என்றால் அவர் சின்ன கலையம்புத்தூரில் தான் வசித்து வருகிறார். வழக்குச் சொத்தானது சின்ன கலையம்புத்தூர் என்றால் சரிதான். 1ஆம் பிரதிவாதி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் சின்ன கலையம்புத்தூர் கிராமம் பஞ்சாயத்தில் நானும் எனது மனைவியும் பஞ்சாயத்து தலைவராக இருந்து வந்தோம் என்றால் கடந்த 2000 ஆம் ஆண்டு முதல் பஞ்சாயத்து தலைவராக இருந்து வந்தேன். வாதி நித்யானந்தம் எனக்கு சொந்தம் என்றால் இல்லை ஒரே ஊர்க்காரர். 1 ஆம் பிரதிவாதி வாதியிடம் நிலங்களை கிரையம் பெற்று வீட்டு மனைகளாக பிரித்து வசித்து வருகிறார் என்றால் சரிதான். கடந்த 24.07.2014 ஆம் ஆண்டு 1ஆம் பிரதிவாதி நிலத்தில் வீடு கட்டுவதற்கு அனுமதி மற்றும் வரைபட நிபந்தனைகள் கொடுத்தீர்களா என்றால் சரிதான். 1ஆம்பிரதிவாதி மேற்படி இடத்தில் வீடு கட்டுவதற்கு திண்டுக்கலில் லே அவுட் அப்ரூவல் வாங்கியுள்ளாரா என்றால் அதுப் பற்றி எனக்குத் தெரியாது. 1ஆம் பிரதிவாதிக்கு வாதி வண்டிப்பாதை பதிந்து கொடுத்துள்ளாரா என்றால் வண்டிப்பாதை கூட்டுப்பாதை ஆகும். வேறொருப் பாதையைத்தான் வண்டிப்பாதையாக கொடுத்துள்ளார். 1ஆம் பிரதிவாதி வா.சா.ஆ.2 ஆன சின்ன கலையம்புத்தூர் கிராமத்திற்கு எழுதிக் கொடுத்த தான பத்திரம் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.2 நான் சாட்சியாக இல்லை என்றால் சரிதான். தான பத்திரம் பற்றி எனக்குத் தெரியுமா என்றால் தெரியும். தான பத்திரத்தில் யார் யார் சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றால் அதுப் பற்றி எனக்குத் தெரியாது. 1 ஆம் பிரதிவாதி வா.சா.ஆ.2 சின்ன கலையமுத்தூர் பஞ்சாயத்திற்கு எழுதிக் கொடுத்துள்ளதால் வாதிக்கு எந்த பாதிப்பும் இல்லை என்றால் சரியல்ல. வாதி வீட்டிற்கு தென்புறம் உள்ள கிழமேல் வண்டிப்பாதை வழியாகத் தான்

1ஆம் பிரதிவாதி சென்று வருகிறார் என்றால் சரியல்ல. 1ஆம் பிரதிவாதிக்கு தடமே இல்லை. நான் வாதிக்கு உறவினர் என்பதால் நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**2, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** :

நான் சாட்சி சொல்ல எனக்கு நீதிமன்றம் மூலம் அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை எனக்கு பூர்வீகம் சின்ன கலையமுத்தூர் என்றாலும், தாவா நிலம் சின்ன கலையமுத்தூர் கிராமத்தில் தான் உள்ளது என்றாலும் சரிதான். தாவா நிலத்தை 1ஆம் பிரதிவாதி வாதியிடமிருந்து கிரையத்திற்கு வாங்கி வீட்டடி மனைகளாக பிரித்து விற்று விற்பனை செய்து வருகிறாரா என்றால் இல்லை, வீட்டடி மனைகளாக பிரித்து வைத்துள்ளார். மேற்படி நிலத்திற்கான வரைபடம் மற்றும் லே அவுட் அப்ரூவல் ஆகியவற்றை சின்ன கலையமுத்தூர் பஞ்சாயத்தில் கொடுத்துள்ளார்களா என்றால் சரிதான். திண்டுக்கல் மாவட்ட திட்டக்குழுவில் அனுமதி வாங்கினார்களா என்றால் எனக்குத் தெரியாது. பஞ்சாயத்து தலைவர் என்ற முறையில் 2014 ஆம் ஆண்டு நான் 1ஆம் பிரதிவாதியின் நிலத்திற்கு குடியிருப்பு வீடு கட்டுவதற்கு வரைபட அனுமதி கொடுத்திருக்கிறீர்களா என்றால் கொடுத்திருக்கிறேன். வாதி நித்யானந்தத்திற்கும் 1ஆம் பிரதிவாதி சொத்து பிரச்சனை சம்பந்தமாக திண்டுக்கல் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு நடந்து அதில் தினேஷ்குமாருக்கு ஆதரவாக தீர்ப்புரை வந்தது என்றால் அதைப்பற்றி எனக்குத் தெரியாது. 1ஆம் பிரதிவாதி பஞ்சாயத்திற்கு தான பத்திரம் பதிந்து கொடுத்தார் என்றால் அது எனக்குத் தெரியும். அதில் உள்ள விபரங்கள் எனக்குத் தெரியும். 1ஆம் பிரதிவாதி தனது அனுபவத்தில் உள்ள இடத்தை தான் பதிந்து தான பத்திரம் எழுதிக் கொடுத்துளார் என்றால் இல்லை, அவர் அனுபவத்தில் இல்லை. அதனால் வாதிக்கு எவ்வித பாதிப்பும் இல்லை என்றால் சரியல்ல. நானும், வாதியும் ஒரே சமுதாயம் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Taken down by me in open court and
read over to the witness in Tamil and
acknowledge by him/her to be correct

APOORVA S
Digitally signed by APOORVA S
Date: 2025.10.17 15:20:51 +0530

District Munsif,
Palani.